# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பண்ருட்டி

## முதலேற்பு வழக்கு எண். 308/2014

1969ம் ஆண்டு 44வது பிரமாண சட்டத்தின் 4வது பிரிவின் கீழ் திருமதி. எம். ஆர்த்தி, எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் : பழனிவேல்
த/பெயர்: ஆறுமுகம்
நாள் : 24.08.2023

**வா.சா.2.**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

பிரதிவாதி சுற்றுசுவர் கட்டும்போது நான் தடுத்த விவரம் வேறு யாருக்கும் தெரியாது. அப்போது கொரோனா நோய் காலம். கொரோனா நோய் 2019 -2021 காலத்தில் இருந்தது என்றால் சரிதான். பிரதிவாதி தரப்பில் முதலில் சுற்றுசுவர் எழுப்பியபிறகுதான் நிறுவனம் கட்டப்பட்டது. பிரதிவாதியின் நிறுவனம் சுமார் 5, 6 வருடமாக இயங்கி வருகிறது. பிரதிவாதி சுற்றுசுவர் கட்டும்போது நான் ஆட்சேபணை செய்ததற்கு பிரதிவாதி வழக்கு நடந்துவருவதால் வழக்கில் என்ன முடிவாகிறதோ அதன்படி பார்த்துக்கொள்ளலாம் என கூறினார். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள அளவீடு எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வரைபடத்தின் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன். பிரதிவாதி எவ்வளவு விஸ்தீரணத்திற்கு ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்பது குறித்து சர்வேயர் கொடுத்த வரைபடத்தில் குறிப்பிட்டு காண்பித்துள்ளார். வாதி கிரையதாரர் எவ்வளவு இடத்தை அனுபவித்து வந்தாரோ அதைதான் வாதி கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார் எனவும், பிரதிவாதி கிரையம் பெற்ற இடத்தைதான் அவர் அனுபவித்து வருகிறார் எனவும், சொன்னால் சரியல்ல.

இவ்வழக்கு இல்லாமல் ரங்கசாமி மற்றும் கண்ணபிரான் ஆகியோர்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அரசு வேலையில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டதால் வேறு வேலை இல்லாமல் பிரதிவாதிக்கு தொந்தரவு கொடுத்துவருகிறேன் எனவும், பிரதிவாதி மற்றும் ஊரில் மற்றவர்கள் பெயரில்

வழக்கு தாக்கல் செய்வதையே வேலையாக வைத்துவருகிறேன் எனவும், சொன்னால் சரியல்ல. வாதி தாக்கல் செய்த வழக்கு எந்த வகையிலும் நிலைக்கத்தக்கதல்ல எனவும், செலவுத்தொகையுடன் தள்ளுபடிக்குரியது எனவும், சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.